மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வேப்பந்தட்டை
அசல் வழக்கு எண்.236/2019

**2024–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 03–ம் நாள் புதன் கிழமை** வாதி தரப்பு சாட்சியாகிய PW–1 வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54 வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) **செல்வி. S. இவாஞ்சலின், இளநிலை உதவியாளர்** என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | :கிருஷ்ணமூர்த்தி | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார் பெயர் | :நடேசபடையாச்சி | வட்டம் | :வேப்பந்தட்டை |
| கிராமம் | :வி.களத்தூர் | சமயம் | : |
| சாதி | : | வயது | : 71/2024 |

**முதல் விசாரணை :**

1 (i) நான் இவ்வழக்கில் 1–ம் வாதியாவேன். 2–ம் வாதி எனது தாயாவார். 3 முதல் 5 பிரதிவாதிகள் எனது சகோதர, சகோதரிகள் ஆவார். நான் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தை எழுத்து மூலமாக எனக்காகவும் மற்ற வாதிகளுக்காகவும் சேர்த்து தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். நான் தாக்கல் செய்யும் ஆவணங்களை வாதி தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன். 06.04.2005–ம் தேதியிட்ட IA No. 1613/2004 in O.S. No. 753/2004 (39/2019) –ல் ஏற்பட்ட Decreetal Order –ன் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். (அது **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) 06.04.2005–ம் தேதியிட்ட IA No. 1613/2004 in O.S. No. 753/2004 (39/2019) ல் ஏற்பட்ட Fair Order –ன் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். (அது **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) தாவா சொத்திற்குண்டான ரீ–செட்டில்மெண்ட் ரிஜிஸ்டரின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். (அது **வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) 30.06.1998–ம் தேதியிட்ட பெரம்பலூர் RDO பிறப்பித்த உத்தரவின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். (அது **வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.)

ii) 20.07.1999–ம் தேதியிட்ட அ.வ.எண்.607/1992–ல் ஏற்பட்ட Decree –ன் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். (அது **வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) 26.05.1997–ம் தேதியிட்ட திருச்சி முன்னாள் ராணுவ வீரர்கள் நலத்துறை பிறப்பித்த உத்தரவின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். (அது **வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) 25.07.1998–ம் தேதியிட்ட 2–ம் வாதி

அளித்த புகாருக்கு தமிழ்நாடு காவல் துறை அளித்த புகார் மனு ஏற்பு ரசீதின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். (அது **வா.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.)

(iii) 22.07.1998–ம் தேதியிட்ட வாதிகளுக்கு சாதகமாக பெரம்பலூர் RDO பிறப்பித்த உத்தரவின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். (அது **வா.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) 19.05.2003–ம் தேதியிட்ட 2–ம் வாதி பெரம்பலூர் மாவட்ட ஆட்சித்தலைவர், வேப்பந்தட்டை வட்டாட்சியர் மற்றும் வி.களத்தூர் கிராம நிர்வாக அலுவலர் ஆகியோருக்கு கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். (அது **வா.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) மேற்படி அறிவிப்பை மேற்படி நபர்கள் பெற்றுகொண்டதற்காக அஞ்சல் ஒப்புதல் அட்டைகளின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். (அது **வா.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) 25.09.2004–ம் தேதியிட்ட வாதிகள் அளித்த புகாருக்கு வி.களத்தூர் காவல் நிலையத்தில் அளித்த புகார் மனு ஏற்பு ரசீதின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். (அது **வா.சா.ஆ.11** ஆக குறியீடு செய்யப்படுகிறது.)

iv) 23.04.2004–ம் தேதியிட்ட ராயமுத்து மற்றும் மூன்று நபர்கள் பெயரிலுள்ள சிட்டாவின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். (அது **வா.சா.ஆ.12** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) நிலவரி ரசீதுகளின் (எண்ணிக்கை 7 ) சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். (அது (எண்ணிக்கை 7 ) **வா.சா.ஆ.13** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) 27.09.2004–ம் தேதியிட்ட திருச்சி முன்னாள் ராணுவ வீரர்கள் நலத்துறை, உதவி இயக்குநர் பிறப்பித்த உத்தரவின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். (அது **வா.சா.ஆ.14** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) 15.07.2006–ம் தேதியிட்ட வாதிகள் அளித்த புகாருக்கு வி.களத்தூர் காவல் நிலையத்தில் அளித்த புகார் மனு ஏற்பு ரசீதின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். (அது **வா.சா.ஆ.15** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) 15.07.1991–ம் தேதியிட்ட பதிவு செய்யபட்ட கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். (அது **வா.சா.ஆ.16** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) 27.09.1993–ம் தேதியிட்ட பதிவு செய்யபட்ட கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். (அது **வா.சா.ஆ.17** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) வழக்கறிஞர் ஆணையம் தாக்கல் செய்த அறிக்கை, வரைபடம் மற்றும் நிலஅளவையர் தாக்கல் செய்த நிலவரைபடத்தை எனது தரப்பு சான்றாவணமாக குறியீடு செய்ய வேண்டுகிறேன். வழக்கறிஞர் ஆணையர் தாக்கல் செய்த

அறிக்கையை **நீ.ம.சா. ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கறிஞர் ஆணையர் தாக்கல் செய்த வரைபடம் **நீ.ம.சா. ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நிலஅளவையர் தாக்கல் செய்த நிலவரைபடம் **நீ.ம.சா. ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன். 1–ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக வாய்தா அளித்து உத்தரவிடப்படுகிறது.